පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 290
ආයතනයේ නම : මහජන ආරක්ෂක අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீடுகளின் தொடர் : 290
நிறுவனத்தின் பெயர் : பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) யின் அடிப்படையில் பொதுக் கணக்குகள் குழுவால் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட அறிக்கை தொடர்பிலான அவதானிப்புகளையும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: 290
Name of the institution: Ministry of Public Security

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of the Standing Order No 119(4)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் :- 290

நிறுவனத்தின் பெயர் :- பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு

தொ. இல	அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	சீர் செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
1	2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாவது கடவுச்சொல்லை கணக்காளர் அல்லது அவரிடம் அனுமதி பெற்றுள்ள பதவிநிலை உத்தியோகத்தர் மட்டும் பயன்படுத்தவில்லை.	தேவையானவாறு கடவுச்சொல் இற்றைப்படுத்தப்பட்டு கணக்காளர் (நிதி) மூலம் மாத்திரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
2	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம் 2018.08.01 ஆம் திகதியின் பின்னர் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படாமை.	குறித்த காலப் பகுதியினுள் அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று இயங்கிவரவில்லை. தற்போது பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்றது.
3	நி.ஒ. 134(3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை.	குறித்த காலப் பகுதியினுள் அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று இயங்கிவரவில்லை. தற்போது பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டு நி.ஒ. 134(3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.
4	நி.ஒ. 134(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை.	குறித்த காலப் பகுதியினுள் அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று இயங்கிவரவில்லை. தற்போது பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டு நி.ஒ. 134(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

5	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் 2 கூட்டங்களையாவது நடத்தியிருக்கவில்லை.	குறித்த காலப் பகுதியினுள் அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று இயங்கிவரவில்லை. தற்போது பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டு உரியவாறு கணக்காய்வுகள் மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நடாத்திச் செல்லப்படுகின்றது.
6	2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி 1 இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நி.ஒ. 756(6) இன் பிரகாரம் பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறித்த தினத்தில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை.	2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி 1 இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லையின் பிரகாரம் அமைச்சு ஒன்றுடன்/ திணைக்களம் ஒன்றுடன்/ மாவட்டச் செயலகம் ஒன்றுடன் தொடர்புடையதாக மாகாண அல்லது பிரதேச அலுவலகங்கள் காணப்படுமாயின் பொருள் கணிப்பாய்வு அறிக்கைகள் எதிர்வரும் நிதியாண்டின் யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலும் 2021 ஆம் நிதியாண்டுடன் தொடர்புடைய பொருள் கணிப்பாய்வு அறிக்கைகள் 2022.06.02 ஆம் திகதியன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
7	வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை.	வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிகொணரப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பான பணிகள் குறித்த ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
8	அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை.	எதிர்காலத்தில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
9	வாகனமொன்று பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 8 மாதத்திற்கும் குறைவான காலத்தினுள் விற்றொழிக்கப்படாமை.	பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட வாகனங்கள் தற்போது இல்லை.
10	வங்கி இணக்ககூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்ட, சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்கு விதிகளின்படி செயலாற்றி குறித்த மீதிகள் ஒருமாத காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சீராக்கம் செய்ய வேண்டி இருந்த மீதிகள் 2021 நிதியாண்டில் நிலவியதுடன் உரிய சீராக்கங்கள் மற்றும் சரிசெய்தல்கள் பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
11	குறித்த திகதியைத் தாண்டி ஏனைய நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.	வேறு நிறுவனங்களுக்கு நிதி ஏற்பாடுகள் உரிய காலத்தினுள் வழங்கப்பட்டிருந்த போதிலும் சில அவசர சந்தர்ப்பங்களின் போது காலப் பகுதிக்கு வெளியேயும் நிதி ஏற்பாடுகளை வழங்க வேண்டி ஏற்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றேன்.

12	ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கப்படவில்லை.	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் மீதிகளை அறவிடுவதற்காக விசேட அதிரடிப்படையின் அதிகாரி ஒருவருக்கு எதிராக மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், ஏனைய அதிகாரிகளிடமிருந்து முறையாக அறவிடப்பட்டு வரப்படுகின்றது.
13	அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கு இருப்பு திறைசேரிப் புத்தகங்களுடன் ஒப்பிடுகையில் காலாண்டுக்கு ஒரு முறை கட்டுநிதி இணக்க அறிக்கை உரிய திகதிக்கு முன்னர் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கு நிலுவையை திறைசேரிப் புத்தகங்களுடன் காலாண்டிற்கு ஒருமுறை ஒப்பிடும் கட்டுநிதி இணக்கக் கூற்று 2021 ஆம் ஆண்டில் திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை, 2023 ஆம் ஆண்டு முதல், கட்டுநிதி இணக்கக் கூற்று உரிய தினத்திற்கு முன்னர் திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
14	கட்டுநிதி ஒப்பீட்டுக் கூற்றுக்கு அமைய அறிக்கையில் கண்டறியப்பட்ட மாற்றங்கள் அடையாளம் கண்டு அவற்றினை சீர் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	கட்டுநிதி இணக்கக் கூற்றுப் படி மாற்றங்கள் இருக்கவில்லை.
15	2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பணியாட்டொகுதியினரது தகவல்கள் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து ஒரு மாத காலப் பகுதிக்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்படாமை.	தற்போது இடம்பெற்று வருகின்றது.
16	பொது மக்களால் கேட்கப்படுகின்ற தகவல்களை வழங்குதல்/ வழங்காதிருத்தல் சம்பந்தமான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணிவரப்படவில்லை.	தற்போது இந்த ஆவணம் பேணிவரப்படுகின்றது.
17	கேட்கப்படுகின்ற தகவல்களை வழங்காதிருத்தல் சம்பந்தமாக முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளை பதிதல் மற்றும் அது சம்பந்தமாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றி தெளிவுபடுத்துகின்ற பதிவேடுகள் பேணிவரப்படவில்லை.	தற்போது இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டு பேணிவரப்படுகின்றது.
18	பிரசைகள்/சேவைபெறுநர் சமவாயம் முறைப்படி தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.
19	நிறுவனத்தின் பிரசைகள்/சேவைபெறுநர் சமவாயம் முறைப்படி தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.	முறையான வழிமுறையொன்று வகுக்கப்படுகின்றது.

20	2018 சனவரி 24 ஆம் திகதிய இலக்கம் 02/2028 உடைய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க முறையான மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.
21	தயாரிக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தில் 50% இற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணி நேரத்திற்கு குறையாமல் பயிற்சி வாய்ப்பை வழங்குவதில் உறுதி செய்யவில்லை.	பதவியணியின் 50% இற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணி நேரத்திற்கு குறையாமல் பயிற்சி வாய்ப்பை வழங்கக் கூடியவாறு மனிதவளத் திட்டம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
22	ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
23	மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கவும் கொள்திறன் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதற்கும் நிறுவனத்தின் சிரேஷ்ட அலுவலரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்)
24	திட்டமிட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% ஐ விடவும் குறைந்த மட்டத்திலேயே நிலவியது.	நிலவுகின்ற நிதி ஏற்பாடுகள் மீது பயிற்சி வாய்ப்புகளை உச்ச அளவில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
25	அரச உத்தியோகத்தர்கள் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை.	தற்போது சகல பதவிநிலை உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆவணத்தை சமர்ப்பித்துள்ளதுடன் அனைத்தும் பட்டியலிடப்பட்டுள்ளது.
26	அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த அதிகாரிகளை முறையாக இடமாற்றம் செய்யப்படவில்லை.	பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அதிகபட்ச சேவைக் காலத்தை பூர்த்தி செய்த அதிகாரிகளின் தகவல்கள் வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல :- 290

நிறுவனத்தின் பெயர் :- **இலங்கைப் பொலிஸ்**

தொ. இல	அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	சீர் செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.	2021 ஆம் வருடத்தின் இலங்கை பொலிஸின் வருடாந்த நதிக் கூற்றுக்கள் 2019.02.24. ஆம் திகதி கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன. (உரிய திகதி 2022.02.28 ஆகும்)
2	கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாதத்தினுள் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை	தாமதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் அனைத்துக் கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறே, 2022 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துக் கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.
3	உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளுக்காக ஒரு மாதத்தினுள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை	தாமதங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
4	2020.08.28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 1 பகுதியின் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டகத்தினுள் நி.ஒ.விதி .756(6) இன் பிரகாரம் பண்டக் கணக்கெடுப்பு செய்யப்பட்டு உரிய தினத்தில் குறித்த அறிக்கை கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2021 ஆம் ஆண்டிற்கான இலங்கை பொலிஸிற்குரிய அனைத்து இடங்களிலும் பண்டக் கணக்கெடுப்புச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் பண்டக் கணக்கெடுப்பு அறிக்கையைக் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்குச் சமர்ப்பிக்கும் போது ஏற்பட்ட தாமதங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் கணக்கெடுப்பு உரிய திகதியில் நடாத்தப்பட்டது.
5	வருடாந்த பண்டக் கணக்கெடுப்பில் தெரிய வந்த மிகை, குறைபாடுகள் தொடர்பான பரிந்துரைகளும், ஏனைய பரிந்துரைகளும் உரிய காலப்பகுதியினுள் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை	2021 ஆம் ஆண்டிற்கான பண்டக் கணக்கெடுப்பின் மூலம் அவதானிக்கப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் தொடர்பான பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டன.
6	அனைத்து வாகனங்களிலும் அரச சின்னம் நிறம் தீட்டப்பட்டிருக்கவில்லை.	2002.02.25 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கைக் கடித இலக்கம் 01/2002 இற்கமைய, பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 26/92 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள வாகனங்கள் தவிர்ந்த, ஏனைய வாகனங்களுக்குத் திணைக்களப் பெயரைப் பொறித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

7	வாகனம் ஒன்று தீர்த்தொதுக்கப்பட்டு 8மாதங்களை விடக் குறைவான காலத்தின் போது புறத்தொதுக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.	2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இலங்கை பொலிஸிற்குச் சொந்தமான ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களைப் புறத்தொதுக்குவதற்காக வாகன தீர்த்தொதுக்கல் சபையினால் பரிந்துரைக்கப்பட்டு, விலை மதிப்பீட்டு சபையினால் பரிசோதனை செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 2023.08.29, 2023.09.05, 2023.09.12, 2023.09.14, 2023.09.21, 2023.09.27 ஆகிய தினங்களில் ஏலத்தில் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன.
8	வங்கி கணக்கிணக்க கூற்றுக்களில் தெரிய வந்த சீராக்கம் செய்ய வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நி.ஒ.விதி பிரகாரம் ஒரு மாத காலத்தினுள் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.	2021.12.31 ஆம் திகதியில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட செலுத்தி சீராக்கம் செய்யப்பட வேண்டிய மீதிகள் அடையாளம் காணப்பட்டு ஏற்கனவே செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளன.
9	நி.ஒ.விதி . 94(1) பிரகாரம் செலவு விடயத்துக்குச் செய்யப்பட்டிருந்த ஒதுக்கீட்டிலிருந்து பயன்பாட்டின் பின்னர் மீதமான ஒதுக்கீட்டு எல்லை அனுமதிக்கப்பட்ட எல்லையை விஞ்சியதாக பொறுப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.	பொதுமக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குதல், சட்டத்தையும் ஒழுங்கையும் தொடர்ந்து பேணி வருதல் ஆகியனவற்றுக்குத் தேவையான மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களை மேற்கொள்வதற்கு நி.ஒ.விதி. 94(1) இன் பிரகாரம், ஏற்பாடுகளை விஞ்சிய வகையில் பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டமை நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அப்பொறுப்புக்கள் அடுத்த வருடத்தின் போது தீர்க்கப்பட்டன.
10	ஒரு வருடத்தை விட மேற்பட்ட காலம் தொடக்கம் இருந்து வருகின்ற நிலுவைக் கடன் மீதிகள் காணப்பட்டன.	2021.12.31 ஆம் திகதியில் 2125 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் மீதி ரூபா.46,756,018 ஆக இருந்ததுடன் 2023.09.30 ஆம் திகதியாகும் போது 561 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா.7,254,305 அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதியாகவுள்ள கடன் மீதியில் மேலும் அறவிடப்பட முடியாத கடன் மீதியான ரூபா 9,074,954 தொகையான கடன் மீதித்தொகையை அரசாங்க நிதிச் சுற்றறிக்கை 01/2020 இற்கமைய பதிவழிப்பதற்காக கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மேலும் அறவிடப்படுவதற்குள்ள கடன் மீதியான ரூபா. 30,426,759 தொகையை அறவிட்டுக் கொள்வதற்கான வேலைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

11	பொது வைப்புக் கணக்கில் காலம் கடந்த வைப்பு தொடர்பில் நி.ஒ.விதி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2021.12.31 ஆம் திகதியில் 02 வருட காலத்தை விஞ்சிய வைப்புக் கணக்கின் மீதி ரூபா. 232,581,722 ஆக இருந்ததுடன் அந்த வைப்பு மீதியில் ரூபா.102,202,315 தொகையொன்று 2023.10.31 ஆம் திகதியளவில் செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளதோடு அன்றைய திகதியில் செலுத்தித் தீர்க்கப்பட வேண்டிய தொகையான ரூபா.130,379,407 தொடர்பில் நி.ஒ.விதி. 571 இன் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
12	நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வுக் கருத்துரை நிராகரிக்கும் மட்டத்தில் அல்லது பாதகமான மட்டத்தில் காணப்பட்டது. .	2021 ஆம் ஆண்டிற்கான இலங்கை பொலிஸின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள கணக்காய்வுக் கருத்துரை நிராகரிக்கும் மட்டத்திலான அல்லது பாதகமான மட்டத்திலான ஒரு கணக்காய்வு கருத்துரையல்ல என்பதோடு முனைப்பளியுள்ள கணக்காய்வுக் கருத்துரையாகும்.
13	ஆகக் கூடிய சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களை உரியவாறு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் PSC/EST/05-04-63/01/2022 ஆம் இலக்க 2022.06.17 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள இலங்கை பொலிஸின் இடமாற்ற நடைமுறையை அமுல்படுத்துவதற்காக வெளியிடப்பட்டுள்ள 2022.09.08 ஆம் திகதிய 2735/2022 ஆம் இலக்க பொலிஸ்மா அதிபர் சுற்றறிக்கையின் மூலம் இலங்கைப் பொலிஸ் அலுவலர்களின் இடமாற்ற நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் :-290
திணைக்களத்தின் பெயர் :-குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

தொ. இல	அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	சீர் செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
முதலாவது பகுதி : 81.00		
1	கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்படவில்லை.	2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிலவிய கொவிட் தொற்றுநோய் மற்றும் கணினி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான தொழில்நுட்ப விடயங்கள் பற்றி தெளிவுகளைப் பெற்றுக்கொள்ளும் போது திணைக்களத்தில் காணப்பட்ட வேலைப்பழுமிக்க சூழல் காரணமாக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு விடையளிப்பதில் கால தாமதம் ஏற்பட்ட போதிலும் தற்போது உரிய காலத்தில் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கப்படுகின்றது.
2	உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்படவில்லை.	
3	2017.06.26 ஆம் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட சொத்துக்கள் பற்றிய தகவல்கள் கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	2017.06.26 ஆம் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியில் 2018 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு நிறுவனத்தினாலும் கொள்வனவு செய்த மற்றும் அகற்றிய சொத்துக்கள் தொடர்பில் கொம்ப்ட்ரோலர் நாயகம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளதோடு, அதற்கமைய கொம்ப்ட்ரோலர் நாயகத்தினால் அவ்வப்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்ட தகவல்கள் தாமதமின்றி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, மேற்படி விடயம் தொடர்பில் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் 2022 ஆம் ஆண்டு முதல் காலாண்டு அடிப்படையில் அந்த அறிக்கைகளை அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
4	அனைத்து வாகனங்களினதும் உரித்தை உறுதிப்படுத்தும் கடிதங்கள் உடமையில் இல்லாதிருத்தல்.	தற்போது திணைக்களம் வசமுள்ள நாளாந்தம் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை 33 ஆகும். அவற்றில் PH-9562, PH-4517, NC-9317, NC-9321 எனும் வாகனங்கள் 2023.12.18 ஆம் திகதி முதல் 02 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளன. 28 வாகனங்களின் உரிமம் திணைக்களம் வசம் உள்ளது. NB-6469 எனும் வாகனத்தை கையகப்படுத்துவதற்கு 2022 ஒக்டோபர் மாதம் மற்றும் 2023.06.23 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, பல சந்தர்ப்பங்களில் நிதி அமைச்சுக்கு சென்று மற்றும் தொலைபேசி

		ஊடக முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் இது வரையில் இந்த வாகனத்தை கையளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பில் திணைக்கள கணக்காய்வு முகாமைத்துவக்குழு கூட்டத்தில் 06 முறை கலந்துரையாடப்பட்டுள்ளது.
5	சகல வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்படவில்லை.	இந்தத் திணைக்களத்தின் அனைத்து வாகனங்களும் குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டங்களை மீறும் வெளிநாட்டவர்களை கைதுசெய்வதற்கு மற்றும் புலனாய்வுகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்தப்படுவதனால் இந்த வாகனங்களில் அரச இலச்சினையைப் பொறிப்பதனால் அந்தப் புலனாய்வு நடவடிக்கைகளுக்கு பாரிய தடைகள் ஏற்படலாம். புலனாய்வுப் பணிகளுக்கு தொடர்ந்தும் ஒரே வாகனத்தைப் பயன்படுத்துவதன் மூலம் ஒற்றர்களுக்கு அது வசதியாக அமையலாம். எவ்வாறெனினும் தற்போது அனைத்து வாகனங்களிலும் திணைக்களத்தின் பெயர் பதிக்கப்பட்ட பெயர் பலகையொன்று முன்னால் தெரியும் வண்ணம் வாகனத்தின் முன்பக்க கண்ணாடிக்கு உட்புறமாக வைக்கப்பட்டுள்ளது.
6	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் வாகனங்களில் எரிபொருள் பரிசசோதனை செய்யப்படவில்லை.	திணைக்களத்திற்குரிய 06 வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பற்றிய பரிசோதனை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, திணைக்களத்திற்குரிய பொது வாகனங்களை கடமைகளுக்கு பாதிப்பின்றி எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனைக்கு ஆற்றுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
7	வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்கள் மூலம் கண்டறியப்பட்ட செம்மையாக்கல் செய்யப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நி.ஒ. பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படவில்லை.	ஏற்புடைய அனைத்து மீதிகளும் தற்போது தீர்க்கப்பட்டுள்ளன.
8	நி.ஒ. 94(1) பிரகாரம் செலவினத் தலைப்பொன்றுக்கு செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகளில் பயன்படுத்திய பின்னர் எஞ்சிய ஒதுக்கீடுகளுக்கு அதன் அனுமதிக்கப்பட்ட எல்லைகளுக்கு அப்பால் பொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தன.	செலவினத் தலைப்புக்களின் ஒதுக்கீடுகளை விஞ்சி பொறுப்புக்களை ஏற்க முடியாது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். எனினும், 2021 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சமூக நிலைமைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் காரணமாக கட்டாயமாக மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கு பொறுப்புக்களை ஏற்க வேண்டி ஏற்பட்டது. நாளாந்தம் பொதுமக்களுடன் தொடர்புடைய பணிகளை நிறைவேற்றும் நிறுவனம் என்ற ரீதியில் புறக்கணிக்க முடியாத பணிகளை நிறைவேற்றுவதற்கு மாற்று வழிகள் இல்லாத காரணத்தினால் இவ்வாறு நிதி ஒதுக்கீடுகளை விஞ்சி பொறுப்புக்களை ஏற்க நேரிட்டது.
9	ஒரு வருடத்திற்கும் மேலான காலம் தொடக்கம் நிலவும் கடன் மீதிகள் காணப்படுகின்றன.	மரணமடைந்த திரு. அஜித் விஜேசூரிய அவர்களின் கடன் மீதியை அறவிடுவதற்கு பிணையாளர்கள் தொடர்பில் கண்டறிவதற்கு அரசாங்க நிர்வாக அமைச்சிலிருந்து கடன் கோவை வரவழைக்கப்பட்டுள்ளதோடு, அக்ரஹா

		காப்புறுதி பிணையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது செல்லுபடியற்றது என்பதனால் இந்தக் கடன் தொகையை அறவிடுவதற்கு மாற்று வழிகள் காணப்படாத காரணத்தினால் இந்தக் கடன் தொகையை பதிவழிப்புச் செய்வதற்கு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அனுமதியுடன் பொதுத் திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. பணித்தடை செய்யப்பட்ட திரு.எச்.கே.ஆர்.ஏ. ஜயவர்தன வினைத்திறனின்மை காரணமாக ஓய்வுபெறுவிக்கப்பட்டுள்ளார். காணாமல் போன கோவைகள் தொடர்பில் புகையிரத திணைக்களத்திலிருந்து குழு அறிக்கை வேண்டப்பட்டு அது ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஓய்வூதியத்தை தயாரிக்கும் போது இந்தத் தொகையை அறவிட்டுக்கொள்ள முடியும். திரு. எம்.யு.எம். முன்சிர் - பதவி நீக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் அரசாங்கத்திற்கு அறவிட்டுக்கொள்ள வேண்டிய தொகையை அறவிடுவதற்காக எனது இலக்கம் DIE/ADM/E7/ඇපදෑ කෑය /පොදු හා 2023.09.25 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திரு. எம்.யு.எம். முன்சிர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். திரு. சிந்தக்க ஜயமாலின் கடன் மீதியை தற்போது அவரது பிணையாளரிடமிருந்து ஏற்புடைய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
10	நி.ஒ. 371 பிரகாரம் வழங்கப்பட்ட நிமித்த உப கட்டுநிதி ஏற்புடைய பணி நிறைவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்படவில்லை.	2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலமை காரணமாக உத்தியோகத்தர்களை வரையறுத்து கடமைக்கு அழைத்த காரணத்தினால் சில சந்தர்ப்பங்களில் நிமித்த உப கட்டுநிதிகளை தீர்ப்பதில் தாமதங்கள் நிகழ்ந்துள்ளன. தற்போது இந்த நிலமை சரிசெய்யப்பட்டு பெற்றுக்கொள்ளும் நிமித்த உப கட்டு நிதி உரிய பணி நிறைவடைந்து ஒரு மாத காலப் பகுதி நிறைவடைவதற்கு முன்னர் தீர்க்கப்படுகின்றது.
இரண்டாவது பகுதி : 89.00		
01	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் மறுக்கக்கூடிய அல்லது பாதகமான மட்டத்தில் காணப்பட்டது.	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய அபிப்பிராயம் முனைப்பழியுள்ள அபிப்பிராயமாகும்.

பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் :- 290
நிறுவனத்தின் பெயா :- ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்

தொ. இல	அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	சீர் செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
முதலாம் பகுதி : 96.00		
1	2017.06.26 ஆம் திகதிய 1/2017 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்திக்கு அமைய 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் அகற்றல்கள் பற்றிய தகவல்கள் கொம்ப்ட்ரோலர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இலக்கம் 1/2017 எனும் சுற்றறிக்கையில் வருடத்திற்குள் கொள்வனவு மற்றும் அகற்றுதல்கள் பற்றிய தகவல்கள் காலண்டு அடிப்படையில் கொம்ப்ட்ரோலர் நாயக அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் எதிர்காலத்தில் அது தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அவ்வப்போது கொம்ப்ட்ரோலர் நாயக அலுவலகத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய கோரப்பட்ட தகவல்கள் உரிய முறையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
2	சகல வாகனங்களிலும் அரச இலச்சினைப் பொறிக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது திணைக்களத்தின் வாகனங்களில் அரச இலச்சினையைப் பொறிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, 2024.01.31 ஆம் திகதியளவில் சுற்றறிக்கைப் பிரகாரம் அடையாளமிடப்பட வேண்டிய அரச இலச்சினை பொறிக்கப்பட்டு நிறைவடையும்.
3	நி.ஒ. 94(1) பிரகாரம் செலவினத் தலைப்பொன்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டு நிறைவடைந்த பின்னர் எஞ்சிய ஒதுக்கீடுகளுக்கு எல்லையைத் தாண்டி பொறுப்புக்களுக்கான கடப்பாடுகள் ஏற்கப்பட்டிருந்தன.	நி.ஒ. 94(1) பிரகாரம் ஒதுக்கீட்டு எல்லையைத் தாண்டி பொறுப்புக்களுக்கு கடப்பாடுகள் தடுத்து வைக்கப்பட்ட போதிலும், ஏற்புடைய ஆண்டில் வழங்கல் மற்றும் சேவை செலவினங்களுக்கு வருடாந்த ஒதுக்கீடு பற்றாக்குறையாக இருந்த சந்தர்ப்பங்களில் நி.ஒ. 94(2) இன் கீழ் வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளுக்கு அமைய இவ்வாறு கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன.
இரண்டாம் பகுதி : 79.00		
1	தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டத்தின் மூலம் ஆளணியில் 50 க்கும் மேற்பட்டவர்களுக்கு வருடமொன்றில் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பம் உறுதிப்படுத்தப்படவில்லை. திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்கள் 50மூ இற்கும் குறைவாக காணப்பட்டது.	2021 ஆம் ஆண்டில் நாடு பூராகவும் கொவிட் தொற்றுநோய் நிலைமையின் கீழ் நடமாடுவதற்கும் மக்கள் ஒன்று கூடுவதற்கும் வரையறைகள் செய்யப்பட்ட காரணத்தினால் திட்டமிடப்பட்ட அடிப்படையில் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. எனவே போதியளவு செயலாற்றுகையை அடைந்துகொள்ள முடியவில்லை. 2022 ஆம் ஆண்டு முதல் பயிற்சி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் போதியளவு மட்டத்தில் பேணுவதற்கு ஏற்ற வகையில் பயிற்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன.
2	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வின் அபிப்பிராயம் சிறந்த மட்டத்தில் காணப்படவில்லை.	கணக்காய்வாளர் அதிபதியினால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டுள்ளது.

டிரான் அலஸ்
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்